கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

முன்னிலை: திரு ஜெ.ஆன்ஸ் ராஜா பி.ஏ, பி.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வள்ளியூர்

திருவள்ளுவர் ஆண்டு 2054 சோபகிருது வருடம் சித்திரை மாதம் 13–ம் நாள் புதன்கிழமை

2023 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 26–ஆம் நாள், புதன்கிழமை

**I.A.No. 05 of 2023**
**in**
**O.S. No. 209 of 2015**

அருள்மிகு சுப்பிரமணியசாமி திருக்கோவில்,
அதன் நிர்வாக அதிகாரி மூலம்

... மனுதார் / 1ம் பிரதிவாதி

/எதிர்/

1. சஞ்சய்குமார்
   அவரது பவர் ஏஜெண்ட்
   ஜெயக்குமார் மூலம்

... எதிர்மனுதார் / வாதி

2. தமிழக அரசு,
   திருநெல்வேலி ஆட்சியர் மூலம்
3. வட்டாட்சியர்,
   இராதாபுரம்.
4. ஆணையர்,
   H.R. & C.E. Department
   சென்னை.

... எதிர்மனுதார்கள் /
பிரதிவாதிகள்

இம்மனு 13.04.2023 தேதி அன்று என் முன்னால் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்

J ANNS RAJA Digitally signed by J ANNS RAJA Date: 2023.04.26 16:03:49 +0530

திரு. ஏ. எஸ். ஞானசேகர் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. இ. சீனிவாசன் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகி எதிருரை தாக்கல் இல்லை என குறிப்பிட்டுள்ளார், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எடுத்துரைத்த வாத உரையை கேட்டும் சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## <u>உத்தரவு</u>

மனுதாரர் இம்மனுவுடன் தாக்கல் செய்திருக்கும் கூடுதல் எதிர் வழக்குரையினை ஏற்றுக் கொள்ள உத்தரவிட வேண்டி கட்டளை 8 விதி 9 மற்றும் பிரிவு 151 –ன் கீழ் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **<u>மனுவின் சுருக்கம்:</u>**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் 1ம் பிரதிவாதியாவார். அசல் வழக்கு விசாரணைக்கு வாய்தா போடப்பட்ட பின்னர் வாதி I.A.No. 03 of 2021 மூலமும் I.A.No. 04 of 2021 மூலமும் பல ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார். மேற்படி ஆவணங்கள் அசல் வழக்குடன் தாக்கல் செய்யவில்லை. மேலும், இந்த வழக்கு சம்பந்தமாக 1ம் பிரதிவாதிக்கு 80 சிபிசி அறிவிப்பு அனுப்பப்படவில்லை. 1ம் பிரதிவாதி கோவிலுக்கு எதிராக வாதி எதிரிடை அனுபவம் கேட்டுள்ளார். அதுவும் சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. மேலும், இந்த வழக்கினை நடத்துவதற்கு இந்த நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு கிடையாது. மேற்படி விபரங்கள் குறித்து கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வேண்டியுள்ளது. மேலும், வாதி தற்போது தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் குறித்தும் பதில்

J ANNS RAJA Digitally signed by J ANNS RAJA Date: 2023.04.26 16:03:56 +0530

தாக்கல் செய்ய வேண்டியுள்ளது. எனவே, கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படும் எதிருரையின் சுருக்கம்:</u>**

மனு அபிடவிட்டில் சொல்லப்பட்டுள்ள விஷயங்கள் உண்மையல்ல. மனுதாரரின் பிரமாணப்பத்திரத்தில் எதன் காரணமாக தன்னால் கூடுதல் எதிர்வழக்குரை விஷயங்களை முதலில் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் சொல்லாமல் விடுபட்டுபோய்விட்டது என பிரமாண பத்திரத்தில் கூறவில்லை. ஆனால் கூடுதல் எதிர்வழக்குரை விஷயங்கள் மட்டுமே பிரமாண பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது. உண்மையில் வாதி Section 80 சிபிசியின் கீழ் மனு தாக்கல் செய்வதிலிருந்து விலக்கு அளிக்கக்கேட்டு தனி மனு தாக்கல் செய்துள்ளார். வழக்கில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டிருப்பது காலம் கடந்த ஒன்று. கூடுதல் எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்கள் அனைத்தும் அசல் வழக்கு பிராது சங்கதிகளுக்குதான் பதில் கொடுக்கப்பட்டுள்ளது. கூடுதல் ஆவணங்களுக்கான பதில் இல்லை. எனவே, இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**<u>இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா?</u>**

3. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் அசல் வழக்கு விசாரணைக்கு வாய்தா போடப்பட்ட பின்னர் வாதி I.A.No. 03 of 2021 மூலமும் I.A.No. 04 of 2021 மூலமும் பல ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார். மேற்படி ஆவணங்கள் அசல் வழக்குடன் தாக்கல் செய்யவில்லை. மேலும், இந்த வழக்கு

J ANNS RAJA
Digitally signed by J ANNS RAJA
Date: 2023.04.26 16:04:04 +0530

சம்பந்தமாக 1ம் பிரதிவாதிக்கு 80 சிபிசி அறிவிப்பு அனுப்பப்படவில்லை. 1ம் பிரதிவாதி கோவிலுக்கு எதிராக வாதி எதிரிடை அனுபவம் கேட்டுள்ளார். அதுவும் சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. மேலும், இந்த வழக்கினை நடத்துவதற்கு இந்த நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு கிடையாது. மேற்படி விபரங்கள் குறித்து கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வேண்டியுள்ளது. மேலும், வாதி தற்போது தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் குறித்தும் பதில் தாக்கல் செய்ய வேண்டியுள்ளது. எனவே, கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரரின் பிரமாணப்பத்திரத்தில் எதன் காரணமாக தன்னால் கூடுதல் எதிர்வழக்குரை விஷயங்களை முதலில் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் சொல்லாமல் விடுபட்டுபோய்விட்டது என பிரமாண பத்திரத்தில் கூறவில்லை. ஆனால் கூடுதல் எதிர்வழக்குரை விஷயங்கள் மட்டுமே பிரமாண பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது. உண்மையில் வாதி Section 80 சிபிசியின் கீழ் மனு தாக்கல் செய்வதிலிருந்து விலக்கு அளிக்கக்கேட்டு தனி மனு தாக்கல் செய்துள்ளார். வழக்கில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டிருப்பது காலம் கடந்த ஒன்று. கூடுதல் எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்கள் அனைத்தும் அசல் வழக்கு பிராது சங்கதிகளுக்குதான் பதில் கொடுக்கப்பட்டுள்ளது. கூடுதல் ஆவணங்களுக்கான பதில் இல்லை. எனவே, இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

J ANNS RAJA
Digitally signed by J ANNS RAJA
Date: 2023.04.26 16:04:12 +0530

4. அசல் வழக்கானது வாதி விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரருக்கு வழக்கை நிரூபிக்க ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதாலும், மனுவானது விசாரணை தொடக்கத்திலேயே தாக்கல் செய்யப்பட்டதாலும், மனு அனுமதிப்பதனால் தான் இருதரப்பினர்களுக்கு இடையே உள்ள கருத்து வேறுபாடுகளை அறிய முடியும் என்பதாலும், இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்ட, நஷ்டமும் ஏற்படபோவதில்லை என்பதாலும், இம்மனு அனுமதிக்கத்தக்கது.

இறுதியாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2023ம் வருடம் ஏப்ரல் மாதம் 26-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

J ANNS RAJA
Digitally signed by J ANNS RAJA
Date: 2023.04.26 16:04:21 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வள்ளியூர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்:</u> இல்லை

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்:</u> இல்லை

J ANNS RAJA
Digitally signed by J ANNS RAJA
Date: 2023.04.26 16:04:28 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வள்ளியூர்.

-------------------------------

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
வள்ளியூர்

**I.A.No. 05 of 2023**
**in**
**O.S. No. 209 2015**

வரைவு/ சீரான உத்தரவு

நாள் 26.04.2023

-------------------------------